**C.C.No. 4/2014**

**22.05.2025**

**PW1, தனுஷ்கோடி S/o. வெள்ளைபனையன்**

**( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**குவிமுச பிரிவு 311ன்கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1ம் எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

ஆஜர் எதிரியை தெரியுமா என்றால் தெரியும். நான் சொல்லிய சம்பவம் மேலூரில் உள்ள எனது வீட்டில் வைத்து நடந்ததா என்றால் கொடுக்கம்பட்டியில் வைத்து வாங்கினார். என்னுடைய வாக்குமூலத்தில் கொடுக்கம்பட்டியில் வைத்து தான் நகையை கொடுத்தாக எதுவும் குறிப்பிடவில்லை இல்லை என்றால் சரியல்ல. எதிரியை எப்படி தெரியும் என்றால் என் பிள்ளைகள் கஸ்தூரிபாய் நகரில் படித்துக்கொண்டு இருந்தார்கள் அங்கு போய் வரும் சமயம் எதிரியை பழக்கம். எதிரியிடம் நகை கொடுத்த சொல்லும் சம்பவம் 2007ம் வருடம் என்றால் ஞாபகம் இல்லை 2007 ஆக இருக்கலாம். இதுசம்மந்தமாக மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் மனு கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த மனு சம்மந்தப்பட்ட நடவடிக்கைகள் நான் இந்த விசாரணையில் சொன்னோ என்றால் சொல்லியுள்ளேன். மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் இதுசம்மந்தமாக விசாரித்த போது எழுதிக்கொடுத்தேனா என்றால் சரிதான். அந்த நிகழ்வுகள் மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் ஆவணங்கள் அனைத்தும் இருக்கும் என்றால் சரிதான்.

2) 1ம் எதிரிக்கு நான் நகை கொடுத்த சமயத்தில் 2ம் எதிரி இல்லை என்றால் சரிதான். 2ம் எதிரி வெங்கடேஷ்வரி உறவினர் என்றால் சரிதான். எனது மகள் வீடு கஸ்தூரி பாய் வீடும் எதிரிகள் வீடும் அருகே உள்ளது என்றால் சரிதான். 1ம் எதிரி திருப்பத்தூரில் உள்ள எனது மகளுக்கு பாத்தியப்பட்ட இடம் சம்மந்தமாக உதவி செய்தார் என்றால் இல்லை. 1ம் எதிரி மேலூர் காவல் நிலையத்தில் 2ம் எதிரி மீது புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த புகார் ஆனது 10,1/4 பவுன் திரும்ப பெற்றுத்தருமாறு புகார் கொடுத்திருந்தார் என்றால் சரிதான். அந்த புகாரை விசாரிக்கும்போதுதான் 2ம் எதிரி மேலூர் முத்தூட் பைனான்ஸ்ல் அந்த நகையை அடகு வைத்த விவரம் தெரிய வந்தது என்றால் சரிதான். அந்த விசாரணையின் போது

நானும், 1ம் எதிரியும், காவல் துறை அதிகாரிகளும் முத்தூட் பைனான்ஸ்க்கு சென்று 2 ம் எதிரி பணம் கொடுத்து நகையை மீட்க வந்தால் அந்த நகையை அவரிடம் கொடுக்க வேண்டாம் என்று சொல்லி வந்தோம் என்றால் சரிதான்.

3) ஆனால் அவ்வாறு சொல்லி வந்த மறுநாளே நகையை அடகு வைத்த இடத்தில் நகை அடகு வைத்த அட்டை தொலைந்துவிட்டது என அபிடவிட் வைத்து நகையை திருப்பிவிட்டார் என்றால் சரிதான். எனக்கு சேர வேண்டிய நகைய 2ம் எதிரியிடம் இருப்பது எனக்கு தெரியும் என்றால் நான் நகையை 1ம் எதிரியிடம்தான் கொடுத்தேன் வேறு எதுவும் தெரியாது. நான் மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகாரின்பேரில் 4,1/4 பவுன் நகையை 1ம் எதிரியிடமிருந்து பெற்று கொடுத்தார்கள் என்றால் சரிதான். அந்த சமயத்தில் மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் மேற்கூறிய சம்பவத்தை எழுதி வாங்கினார்களா என்றால் சரியல்ல 1ம் எதிரியிடம்தான் எழுதிவாங்கினார்கள். மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இதுசம்மந்தமான ஆவணங்களை வரவழைத்தால் உண்மை தெரியும் என்றால் சரிதான். மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் நான் கொடுத்த மனு சம்மந்தப்பட்டு நடந்த நடவடிக்கைகள் எல்லாம் 2013ம் வருடம் நடைபெற்றது என்றால் 01.02.2013 ல் நடந்தது.

4) 2ம் எதிரி அடகு வைத்த ரசீது யாரிடம் உள்ளது என்றால் அது சம்மந்தமாக எனக்கு தெரியாது. நான் காவல் துறை அதிகாரிகளிடம் கொடுத்த வாக்குமூலத்தில் அந்த ரசீதை நான் தாக்கல் செய்கிறேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. அதேபோல் மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் 4,1/4 பவுன் நகையை பெற்றுக்கொண்டு மீதம் உள்ள நகையை 2ம் எதிரியிடம் உள்ளது அதை அவரிடமிருந்து பெற்றுக்கொள்கிறேன் என்று எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரியிடம் நகையை கொடுக்கும்போது யார், யார் இருந்தார்கள் என்று எனது போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எங்கள் வீட்டில் அனைவரும் இருக்கும்போதுதான் கொடுத்தேன். நான் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடமிருந்து நகையை பெறும்போது 2ம் எதிரி எனது உறவினர் என்பதால் நகையை அவரிடமிருந்து பெற்றுக்கொள்ள தனி நடவடிக்கை எடுத்துக்கொள்கிறேன் என்று கூறியுள்ளதால் இந்த 1ம் எதிரி மீது எந்த விதமான சட்ட நடவடிக்கையும் எடுக்க முடியாது என்றால் சரியல்ல.